# சிசு சவிய 2021

## 5ம் தர மாணவர்களுக்கான கைக்கோர்ப்பு

5

ஐந்தாம் தர மாணவர்களுக்காக நடாத்தப்படும் மாதிரி பரீட்சை

சப்பிரகமுவ மாகாணம்

# விடுமுறைக் கால விஷேட முன்னோடிப் பரீட்சை

**வினாத்தாள் I** **ஒரு மணித்தியாலம்**

**பெயர் :.................................................................................................**

## சப்பிரகமுவ மாகாணக் கல்வி திணைக்களத்தின் ஆரம்பப்பிரிவின் கையளிப்பு

பரீட்சார்த்திக்கான அறிவுறுத்தல்,

- உங்களுடைய பரீட்சை சுட்டெண்ணை மேலே உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.
- அது போன்று மூன்றாம் பக்கத்திலும் உங்களுடைய பரீட்சை சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலே விடை எழுதுக.
- கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.
- விடை எழுத வேண்டிய வினாக்களின் விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

## விசேட அறிவித்தல்கள் (கவனத்திற்கு)

**பாடசாலை அதிபர்களுக்கானது..**

* இவ் வினாத்தாளினை அச்சிட்டு அல்லது பிரதி எடுத்து (2021-06-15) ஜுன் மாதம் 15ம் திகதிக்கு முன்பே தங்கள் பாடசாலையில் தரம் 5ல் கல்வி கற்கும் சகல மாணவர்களுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவும்.
* வினாப்பத்திரம் தொடர்பாக சந்தேகங்கள், பிரச்சினைகள் இருப்பின், தங்களது கோட்டத்திற்குப் பொறுப்பான ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர், வலயத்தின் ஆரம்பக்கல்விப் பணிப்பாளர் அல்லது மாகாண கல்வித் திணைக்களத்தின் ஆரம்ப பிரிவிற்கு அழைத்து ஆலோசனை பெறவும்.
* புள்ளிகளை தொலைபேசி மூலம் பெற்று அறிக்கைப் படுத்த ஆவண செய்யுங்கள்.
* விடைகள் தொடர்பாக பெற்றோர்களுக்கு சந்தேகங்கள் இருப்பின் வகுப்பு பொறுப்பாசியரின் உதவியைப் பெற்றுக் கொடுக்கவும்.
* வேறு மாகாணம், வலயங்களைச் சேர்ந்த மாணவர்களாயினும் வினாப்பத்திரத்தை வழங்குங்கள்.
* இவ்வேலைத்திட்டம் தொடர்பான தங்களின் ஒத்துழைப்பிற்கும், அர்ப்பணிப்பிற்கும் வாழ்த்துக்கள்.

**அன்பான பெற்றோர்களே ! பிள்ளைகளே !**

* கொவிட் -19தொற்று நோயால் பாடசாலைக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளன..
* வீடுகளில் இருக்கும் தரம் 5 மாணவர்களுக்காக சிசு சவிய முன்னோடி பரீட்சை வினாத்தாள்களை வழங்குகின்றோம்.
* சகல பிள்ளைகளும் (2021-06-15) ஜுன் 15ம் திகதி இவ்வினாப்பத்திரத்திற்கு வீட்டில் இருந்தே விடையளிப்பீர்கள் என எதிர்பார்க்கிறோம்.
* நேர அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| பகுதி I | பகுதி II |
|---|---|
| மு.ப 9.30 – மு.ப 10.30 | மு.ப 10.45 – பி.ப 12.00 |



* வீட்டில் தகுந்த இடத்தை தெரிவுசெய்து வினாத்தாள்களுக்கு விடையளிக்க சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கவும்.
* எவ்விதமான இடையூறுகள், அழுத்தங்கள் கொடுக்காது, சுயமாக வினாப்பத்திரத்திற்கு விடையளிக்க உதவுங்கள்.
* குறிப்பிட்ட தினத்தில் மேற்கொள்ள இயலாதுவிடின் வேறொரு நாளில் விடையளிக்க சந்தர்ப்பம் வழங்குக.
* மிகவும் மகிழ்ச்சியாகவும், விநோதமாகவும் விடைளிக்க ஆற்றல் கிடைக்க வேண்டும் எனப் பிராத்திக்கிறோம்.



சப்பிரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஆரம்பப்பிரிவு






(மறு பக்கம் பார்க்க)




❖ **மிகவும் நெருங்கிய தொடர்பு உள்ள உருச் சோடியைத் தெரிவு செய்க.**

1). (i)  (ii)  (iii) 


2). (i)  (ii)  (iii) 


❖ **வினா இலக்கம் 3, 4 இல் இரண்டு உருவங்களில் ஒத்த இயல்புகள் காணப்படுகின்றன. வித்தியாசமான உருவைத் தெரிவு செய்க.**


3). i).  ii).  iii). 

4). i).  ii).  iii). 

❖ **பின்வரும் எண் கோலங்களில் வெற்றுக்கட்டத்தில் வர வேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.**

5). 






i). 10 ii). 5 iii). 2

6).

| | | |
|---|---|---|
| 6 | 4 | 4 |
| 10 | 25 | 5 |
| 9 | 9 | 6 |
| 12 | | 8 |

i). 16　　ii). 20　　iii). 8

❖ **கீழ்வரும் திருக்குறளை வாசித்து 7ம் , 8ம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.**

" உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்."

7). இக்குறள் மூலம் உணர்த்தும் நற்பண்பாகக் கருதப்படுவது,

i). உண்மையின் உயர்வு.


ii). நன்றி மறவாமை.

iii). பொறுமையை கடைப்பிடித்தல்.

8). வாய்மை தவறாமை எனும் ஒழுக்கத்தினை கடைப்பிடித்த மன்னன்,

i). கர்ணன்　　ii).தருமன்　　iii). அரிச்சந்திரன்

9). கீழே தரப்பட்டிருக்கும் உருவத்தினை சதுரமாக்குவதற்கு இன்னும் தேவையான சிறிய கட்டங்களின் எண்ணிக்கை.



i). 16　　ii). 10　　iii). 6

❖ **10ஆம், 11ஆம் வினாக்களுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

10).விரலுக்கு – தீத்தாள் போல ஊசிக்கு ..................

i). குண்டூசி　　ii). துணி　　iii). நூற்பந்து

11).ஆசிரியருக்கு – பாடசாலை எனின் உழவனுக்கு ................

i). வயல்　　ii). வீடு　　iii). நிலம்

12). நாளை வெள்ளிக்கிழமையாகும். இன்று சாந்தி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டாள். சாந்தி சுகவீனமடைந்தது நேற்றைய தினமாகும். எனின் சாந்தி சுகவீனமடைந்த கிழமை யாது?

i). புதன்கிழமை ii). வியாழக்கிழமை iii). திங்கட்கிழமை

13). இலக்கம் 6 தொடக்கம் 14 வரை ஒழுங்குமுறையாக எழுதப்பட்ட எண் தொடரில் சரி மத்தியில் வரும் எண்ணிலிருந்து முன்னால் வரும் மூன்றாவது எண் யாது?

i). 10 ii). 7 iii). 13

14). மாலதியின் அம்மா பார்வதி. பூரணி பார்வதியின் தாயாராவார். அருண் மாலதியின் தம்பியாவார் எனின் மாலதி பூரணிக்கு யார்?

i). பேர்த்தி ii). மகள் iii). பாட்டி

15). பண்ணையொன்றில் கோழிகளும், ஆடுகளுமாக 10 உள்ளன. அவற்றின் கால்களின் மொத்த எண்ணிக்கை 32 ஆகும். எனின் பண்ணையிலுள்ள ஆடுகளினதும் கோழிகளினதும் எண்ணிக்கை முறையே,

i). 6 , 4 ii). 4 , 6 iii). 5 , 5

16). 10 இலிருந்து 20 வரை எழுதும் போது இலக்கம் 1 வரக்கூடிய சந்தர்ப்பங்கள்,

i). 11 ii). 10 iii). 9

17). 2021ஆம் ஆண்டு எத்தனையாம் நூற்றாண்டுக்குரியதாகும்.

i). 20 ஆம் ii).19 ஆம் iii).21 ஆம்

18). நான் பாடசாலையிலிருந்து மாலை வேளை வீட்டுக்குத் திரும்பி வரும் போது எனது நிழல் என்னைப் பின் தொடர்ந்து வந்ததாயின், நான் எந்த திசையை நோக்கி நடந்து கொண்டிருந்தேன்.

i). தெற்கு ii). மேற்கு iii). கிழக்கு

19). வசந்தியை விட சுகந்தி உயரமானவள். சாந்தி வசந்தியை விட உயரம் குறைவானவள். எனின் உயரம் கூடியவர்,

i). வசந்தி ii). சுகந்தி iii). சாந்தி

❖ **கீழே தரப்பட்டுள்ள விடயத்தை நன்கு வாசித்து 20ஆம், 21 ஆம் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

இந்துமதி பாடசாலைக்கு வருவதற்கு முன்பே பிரியா வந்துவிட்டாள். பிரியாவிற்கு முன்பே பாத்திமா வந்து விட்டாள். சுமதி இந்துமதிக்குப் பின்பே பாடசாலைக்கு வருகை தந்தாள்.

20). இதன்படி பாடசாலைக்கு முதலாவதாக வந்த பிள்ளை,

i). பாத்திமா ii). பிரியா iii). இந்துமதி

21). இவர்களில் பாடசாலைக்கு கடைசியாக வந்த பிள்ளை,

i). இந்துமதி ii). சுமதி iii). பிரியா

22). எவ்வித ஊனமுமற்ற யானைகளின் கால்களினதும், தந்தங்களினதும் கூட்டுத்தொகை 54 ஆகும். எனின் அங்குள்ள யானைகளின் எண்ணிக்கை யாது?

i). 8 ii). 9 iii). 12

❖ **23ஆம் , 24ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள அட்டவணையைத் துணையாக கொண்டு விடையளிக்க. விற்பனை செய்யப்பட்ட நாளிதழ்கள் பற்றிய விபரம்.**

| **நாள்** | **நாளிதழ்கள்** |
|---|---|
| திங்கட் கிழமை | புதன் கிழமையின் இருமடங்கு |
| புதன் கிழமை | 30 |
| வெள்ளிக்கிழமை | திங்கட் கிழமையின் ¼ பங்கு |

23). திங்கட்கிழமை விற்பனையான நாளிதழ்களின் எண்ணிக்கை,

i). 60 ii). 30 iii). 25

24). மூன்று தினங்களிலும் விற்பனையான நாளிதழ்களின் எண்ணிக்கை,

i). 100 ii). 105 iii). 200

25). நோய்வாய்பட்டிருந்த எனது தாத்தாவை நீண்ட நாட்களுக்குப் பின்னர் பார்த்ததில் ..................................... மலர்ச்சியடைந்தேன்.

i). சூரியனைக் கண்ட தாமரை போல

ii). சூரியனைக் கண்ட பனி போல

iii). சூரியன் முன் மின்மினி போல

26). எங்கள் வீட்டுத்தோட்டத்திலுள்ள மரங்களில் அதிகமானவை பழமரங்களாகும். எல்லாப் பழமரங்களிலும் காய்கள் காணப்பட்டன. காய்கள் உள்ள மரங்களில் சில பழமரங்கள் அல்லாதனவாகும். இவ்விவரங்களின் படி சரியான கூற்று,

i). பழ மரங்கள் அல்லாத மரங்கள் சிலவற்றில் காய்கள் உண்டு.

ii). எல்லா மரங்களிலும் காய்கள் இருக்கின்றன.

iii). பழமரங்களிலும் காய்கள் காய்க்கின்றன.


27). இரு பகுதிகளும் சமமாக இருக்கும் நிரையைத் தெரிவு செய்க.

i). 4 6 8 O க B S - 4 6 8 க ட B S

ii). N M L 7 6 ய வ - N M L 7 6 ய வ

iii). வ 2 ச ம 7 6 B - வ 2 ச ம 7 6 S

28). கீழே தரப்பட்டிருக்கும் உருவினுள் உள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை?




i). 5 ii). 28 iii). 20


29). கீழ் தரப்பட்டுள்ள சொற்கள் எழுதப்பட்டுள்ள முறையை விளங்கி வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.


பரிதி , திக்கு , கும்பி .............

i). பிஞ்சு ii). குறள் iii). சுத்தி

30). சிறுவன் ஒரு பூப்பாத்தியை அமைப்பதற்கு ஓர் இடத்திலிருந்து வடக்கு நோக்கி 15 மீற்றருக்கும், அவ்விடத்திலிருந்து கிழக்கு நோக்கி 5 மீற்றருக்கும், அவ்விடத்திலிருந்து தெற்கு நோக்கி 5 மீற்றருக்கும், அவ்விடத்திலிருந்து தொடங்கிய இடத்திற்கும் ஒரு கயிற்றை இழுத்துத் தரையில் அடையாளமிட்டான். அப்பூப்பாத்தியின் வடிவத்தை தெரிவு செய்க.

i). 


ii). 




iii). 

31). சிவப்பு, நீலம், மஞ்சள், பச்சை எனும் ஒழுங்கில் நிற மின்விளக்குகள் ஏரியவிடப்பட்ட தோரணத்தில் 57வது மின்விளக்கின் நிறம் யாது?

i). நீலம் ii). மஞ்சள் iii). சிவப்பு

32). ஒரு கடதாசியில் வட்டம் ஒன்றை வரைந்து வெட்டியெடுத்து அதனை நான்காக மடித்து அதில் சில துவாரங்கள் துளைக்கப்பட்டுள்ள விதம் உருவில் காட்டப்பட்டுள்ளது. வட்டத்தை விரிக்கும் போது தோன்றும் உரு,



i).  ii).  iii). 

33). முகம் பார்க்கும் கண்ணாடியின் முன் ஆங்கில எழுத்துக்களை பார்க்கும் போது மாற்றமின்றித் தெரியும் எழுத்துக்களைத் தெரிக.

**C H S V N O**

i). C யும் H உம் ii). H உம் O வும் iii). N உம் S உம்

❖ **சரியான சொற்களை தெரிவு செய்து 34 , 35ஆம் வினாக்களுக்கு விடையளிக்க.**

A - நாம் B – தொற்றிலிருந்து C - கொரோனா D – பெறுவீர்

E - பாதுகாப்பு F – இறைவனிடம் G – செய்வோம் H – பிரார்த்தனை

34). விழிப்புணர்வை ஏற்படுத்தும் விடையாக அமைவது,

i). A C F G ii). C B E D iii). G F B H

35). வேண்டுதலாக அமையும் சொற்றொடர் குறிப்பது,

i). F A G H ii). A F H G iii).A B G H

36). அம்மா கொண்டு வந்த இனிப்புகளில் எனக்கு தந்ததை விட இருமடங்கு தம்பிக்கும், மூன்று மடங்கு தங்கைக்கும் கொடுத்தார். தங்கைக்கு கிடைத்த இனிப்புகள் 12 எனின், அம்மா கொண்டு வந்த இனிப்புகளின் எண்ணிக்கை?

i). 30 ii). 24 iii). 28

37). கயிற்றின் நீளம் 3m 20cm ஆகும். இதனில் 20cm நீளம் கொண்ட துண்டுகள் எத்தனை வெட்ட முடியும்?

i). 16 ii). 10 iii). 15

38). 10 உடன் இரண்டைக் கூட்டிவரும் விடையை, இரண்டால் பெருக்கி, நான்கை கழிக்கும் போது கிடைக்கும் விடையைத் தெரிவு செய்க.

i). 12 ii). 24 iii). 20

39). ஓடம் ஒன்றில் ஒரு தடவை 5 நபர்கள் பயணிக்க முடியும், 12 நபர்கள் செல்வதற்கு எத்தனை தடவைகள் ஓடத்தினை செலுத்த வேண்டும்.

i). 2 ii). 3 iii). 4

40). பின்வரும் உருவத்தில் நிழற்றப்படாத பகுதியை தசம எண்ணாக எழுதப்பட்டுள்ள விடையைத் தெரிக.



i). 0.4 ii). 0.6 iii). 0.2

# சிசு சவிய 2021

## 5ம் தர மாணவர்களுக்கான கைக்கோர்ப்பு

5

ஐந்தாம் தர மாணவர்களுக்காக நடாத்தப்படும் மாதிரி பரீட்சை
சப்பிரகமுவ மாகாணம்

# விடுமுறைக் கால விஷேட முன்னோடிப் பரீட்சை

**வினாத்தாள் II** **ஒரு மணித்தியாலம் 15 நிமிடம்**

**பெயர் :.......................................................................................**

## சப்பிரகமுவ மாகாணக் கல்வி திணைக்களத்தின் ஆரம்பப்பிரிவின் கையளிப்பு

பரீட்சார்த்திக்கான அறிவுறுத்தல்,

- உங்களுடைய பரீட்சை சுட்டெண்ணை மேலே உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.
- அது போன்று மூன்றாம் பக்கத்திலும் உங்களுடைய பரீட்சை சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலே விடை எழுதுக.
- கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.
- விடை எழுத வேண்டிய வினாக்களின் விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

## விசேட அறிவித்தல்கள் (கவனத்திற்கு)

**பாடசாலை அதிபர்களுக்கானது..**

* இவ் வினாத்தாளினை அச்சிட்டு அல்லது பிரதி எடுத்து (2021-06-15) ஜுன் மாதம் 15ம் திகதிக்கு முன்பே தங்கள் பாடசாலையில் தரம் 5ல் கல்வி கற்கும் சகல மாணவர்களுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவும்.
* வினாப்பத்திரம் தொடர்பாக சந்தேகங்கள், பிரச்சினைகள் இருப்பின், தங்களது கோட்டத்திற்குப் பொறுப்பான ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர், வலயத்தின் ஆரம்பக்கல்விப் பணிப்பாளர் அல்லது மாகாண கல்வித் திணைக்களத்தின் ஆரம்ப பிரிவிற்கு அழைத்து ஆலோசனை பெறவும்.
* புள்ளிகளை தொலைபேசி மூலம் பெற்று அறிக்கைப் படுத்த ஆவண செய்யுங்கள்.
* விடைகள் தொடர்பாக பெற்றோர்களுக்கு சந்தேகங்கள் இருப்பின் வகுப்பு பொறுப்பாசியரின் உதவியைப் பெற்றுக் கொடுக்கவும்.
* வேறு மாகாணம், வலயங்களைச் சேர்ந்த மாணவர்களாயினும் வினாப்பத்திரத்தை வழங்குங்கள்.
* இவ்வேலைத்திட்டம் தொடர்பான தங்களின் ஒத்துழைப்பிற்கும், அர்ப்பணிப்பிற்கும் வாழ்த்துக்கள்.

**அன்பான பெற்றோர்களே ! பிள்ளைகளே !**

* கொவிட் -19தொற்று நோயால் பாடசாலைக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளன..
* வீடுகளில் இருக்கும் தரம் 5 மாணவர்களுக்காக சிசு சவிய முன்னோடி பரீட்சை வினாத்தாள்களை வழங்குகின்றோம்.
* சகல பிள்ளைகளும் (2021-06-15) ஜுன் 15ம் திகதி இவ்வினாப்பத்திரத்திற்கு வீட்டில் இருந்தே விடையளிப்பீர்கள் என எதிர்பார்க்கிறோம்.
* நேர அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| பகுதி I | பகுதி II |
|---|---|
| மு.ப 9.30 – மு.ப 10.30 | மு.ப 10.45 – பி.ப 12.00 |

* வீட்டில் தகுந்த இடத்தை தெரிவுசெய்து வினாத்தாள்களுக்கு விடையளிக்க சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கவும்.
* எவ்விதமான இடையூறுகள், அழுத்தங்கள் கொடுக்காது, சுயமாக வினாப்பத்திரத்திற்கு விடையளிக்க உதவுங்கள்.
* குறிப்பிட்ட தினத்தில் மேற்கொள்ள இயலாதுவிடின் வேறொரு நாளில் விடையளிக்க சந்தர்ப்பம் வழங்குக.
* மிகவும் மகிழ்ச்சியாகவும், விநோதமாகவும் விடைளிக்க ஆற்றல் கிடைக்க வேண்டும் எனப் பிராத்திக்கிறோம்.

சப்பிரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஆரம்பப்பிரிவு



(மறு பக்கம் பார்க்க)

1). பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

இன்று உலகளாவிய ரீதியில் அதீத பொலித்தீன், பிளாஸ்டிக் பாவனை அதிகரித்துள்ளது.நெகிழி என்று கூறப்படும் பிளாஸ்டிக் பன்முகப் பயன்பாடுடையவை. இவற்றின் பாவனையால் நிலம், நீர், வளி, ஆகாயம் போன்ற அனைத்துமே பாதிப்படைகின்றன. இதனால் எம்மைப் போலவே விலங்குகளும் தாவரங்களும் அழிவுகளை எதிர் கொள்கின்றன. இயற்கையோடு இணைந்த பொருள்களைப் பயன்படுத்துவதால், அவை உக்கி நிலத்திற்குப் பசளையாகின்றன. எனவே பொலித்தீன், பிளாஸ்டிக் பாவனையை இயலுமானவரை தவிர்த்துக் கொள்வதில் விழிப்பாய் இருப்போம்.

- **பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடையளிக்குக.**

i). இன்று உலகளாவிய சூழல் பிரச்சினைகளில் முதன்மை இடம் பெறுவது யாது எனக் கூறப்படுகின்றது. ..................................................................

ii). பிளாஸ்டிக்கைத் தமிழில் எவ்வாறு அழைப்பர். ........................................

iii). பிளாஸ்டிக், பொலித்தீன் பாவனையால் பாதிப்படைவன எவை?
.......................................................................................................................

iv). அழிவுகளை எதிர் கொள்வன எவை எனக் கூறப்படுகின்றது?
.......................................................................................................................

v). இயற்கைப் பொருள்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மை யாது?
.......................................................................................................................

vi). பின்வரும் சொற்களின் எதிர்ச் சொற்களை எழுதுக.
ஆக்கம் - .......................... செயற்கை - ..........................

vii). கண்ணாயிருத்தல் என்பதன் மரபுத்தொடரை எழுதுக. ...............................

2). பின்வரும் சொற்களில் சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

i). கோலாகளம், கோலாகலம், கோலாகழம்

ii). ஆறாத்துயரம், ஆராத்துயரம், ஆறாதுயரம்

3). பின்வரும் வாக்கியங்களில் பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.

i). வாருங்கள் வாருங்கள் எல்லோரும் விளையாடச் செல்வோம்

ii). என்ன அரசே இது தெரியவில்லையா வாருங்கள் நம் குதிரைப்படையைப் பார்ப்போம்

4). பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான வினைச் சொல்லைத் தெரிவு செய்க.

i). மரங்கள் சரிந்து ............................... (விழுந்தது / விழுந்தன)

ii). அந்திவானம் செந்நிறமாகக் ................. (காட்சியளித்தது / காட்சியளித்தன)

5). பின்வரும் வாக்கியங்களில் **தடித்த** எழுத்துக்களில் இருக்கும் சொற்களின் கருத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

i). **தக்க சமயத்தில்** எனக்கு நண்பனின் உதவி கிடைத்தது. ..............................

ii). தென்னாலி இராமன் **சாதுரியமாகப்** பதிலளித்தான். ..................................

6). கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்கான பெண்பாற் சொற்களை எழுதுக.

i). குதிரை - ......................    ii). தபுதாரன் - .........................

7). கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசித்து, கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

வாழ்வைக் கெடுப்பது கோபம் – உயிர்

வதை செய்வது பாவம்,

பாபப் பலன்பரி நாசம் – ஊர்

பேசுவதும் பரிகாசம்.

i). எமது வாழ்வைக் கெடுப்பது எது எனக் குறிப்பிடப்படுகின்றது? ....................

ii). எதனைப் பாவம் என்கிறார் பாடலாசிரியர்    .............................

8). பின்வரும் தொடர்களால் உணர்த்தப்படும் கருத்தினை எழுதுக.

i).மாதவன் கண்ட கனவு ஆகாயத்தில் கோட்டை கட்டினாற் போலானது.

.....................................................................................................

ii). நண்பன் செய்த உதவி காலத்திற் பெய்த மழை போலமைந்தது.

.....................................................................................................

9). பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.

i). இரக்கப்போனாலும் சிறக்க போ - ....................................................

ii). இளங்கன்று பயமறியாது - ................................................................


10). கீழ் தரப்பட்டுள்ள சொற்கள் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

i). மாணவன் - .............................    ii). வைத்தியசாலை - ..........................

11). பின்வரும் வாக்கியம் தமிழில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

சுப நத்தலக் வேவா ! - .........................................................................

12). பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

i). 

ii). 


...........................................    .........................................

13). பின்வரும் சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள ஒரு வாக்கியமாக எழுதுக.

i). like / I / flower - …………………………………………………

ii). is / This / pen / my - …………………………………………….

▪ **தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் விடையை எழுதுக.**


14). 


தரப்படிருக்கும் எண் சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள எண்களுள் அம்புக்குறியிடப்பட்டுள்ள எண் அமைந்துள்ள இடப்பெறுமானத்தையும், வகை குறிக்கப்படும் பெறுமானத்தையும் எழுதுக. ...................... , .......................

15). தரப்பட்டிருக்கும் கோலத்திற்கு அமைய அடுத்து வர வேண்டிய உரோமன் இலக்கங்களை எழுதுக.

**I , III , V, ...... , .........**

16). உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதி முழு உருவத்தின் என்ன பின்னமாகும்.



.....................................


17). இமேஷா மு.ப 11.00 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டு 30 நிமிடத்தில் நூலகத்தைச் சென்றடைந்தாள். நூலகத்தில் இருந்து பி.ப 2.30 மணிக்கு வெளியேறினாள். எனின் அவள் நூலகத்தில் இருந்த காலம் எவ்வளவு? .........................

18). பழப்பாகு போத்தல் ஒன்றிலுள்ள பானம் 5 பிள்ளைகளுக்குப் போதுமானதாகும். 23 பிள்ளைகளுக்குப் போதுமான பழப்பாகு போத்தல்கள் எத்தனை? .........................


19). கணிதச் செய்கை மூலம் வெற்றிடத்தில் விடையை எழுதுக.

| | kg | g |
|---|---|---|
| | 1 | 50 |
| + | 2 | 75 |
| | | |

20). கடிகாரம் A இன் முகத்தில் காணப்படும் நேரத்தைக் கடிகாரம் Bயின் முகத்தில் காட்டுவதற்கு அதில் மணித்தியால, நிமிட முட்களை வரைக.




( A )





( B )

21). தரப்பட்டிருக்கும் பொருள் சிட்டையைப் பூரணப்படுத்துக.

| பொருள் | வாங்கிய அளவு | 1 கிலோகிராமின் விலை ரூபாய் | சதம் | பெறுமதி ரூபாய் | சதம் |
|---|---|---|---|---|---|
| அரிசி | 2kg | 120 | 00 | .................. | ...... |
| உருளைக் கிழங்கு | 1kg 500g | 200 | 00 | .................. | ...... |
| கடலை | 500g | 300 | 00 | .................. | ...... |
| | | | மொத்தப் பணம் | ................. | ...... |

22). ருகுணு குமாரி புகையிரத்தில் பயணம் செய்தோர் 2413 பேராவர். உடரட்ட மெனிக்கே புகையிரதத்தில் பயணம் செய்தோர் 1497 பேராவர். இரண்டு புகையிரதங்களிலும் பயணம் செய்தோரின் எண்ணிக்கை யாது? .................


23). உருவிலுள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?



..................................

24). 1 லீற்றர் 200 மில்லிலீற்றர் கொள்ளளவுடைய பாத்திரம் ஒன்றை நிரப்புவதற்கு 150 மில்லிலீற்றர் கொள்ளும் பாத்திரத்தை எத்தனை தடவைகள் பயன்படுத்த வேண்டும்? ..........

25). தரப்பட்டுள்ள வீதி விபரங்களை அவதானித்து விடை தருக.




i). ஹம்பந்தோட்டையிலிருந்து ஹாலிஎல வரைக்குமான தூரம் எவ்வளவு? .........................

ii). வெள்ளவாயவிலிருந்து ஹாலிஎல வரைக்குமான தூரம் எவ்வளவு? ..........................

26). 14kg 5gஐ கிராமில் எழுதுக. ...........................

27). நகரமொன்றில் பேருந்து நிலையம் மணிக்கூட்டு கோபுரத்திற்கு 50m மேற்கிலும், தபால் நிலையம் மணிக்கூட்டு கோபுரத்திற்கு 60m வடக்கிலும், பாடசாலை தபால் நிலையத்திலிருந்து 50m மேற்கிலும் உள்ளதோடு, பாடசாலைக்கு 10m தெற்கில் வைத்தியசாலை அமைந்துள்ளது. இந்நகரத்தில் பாடசாலை வைத்தியசாலைக்கு எத்திசையில் அமைந்துள்ளது? ..........................

28). மிகப் பெரிய எண்ணைத் தெரிவு செய்து வெற்றிடத்தில் எழுதுக.

**2 , 0.5 , iv , ½ , 7 - ................**

29). 24871, 21478, 24718 என்னும் எண்களில்,

i). மிகப்பெரிய, மிகச் சிறிய எண்களை எழுதுக. ...................... ........................

ii). இம் மூன்று எண்களையும் ஏறுவரிசையில் எழுதுக. ......................................................

- **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையிலான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30). எமது அன்றாட தேவைகளை ஒழுங்காகவும், முறையாகவும் செய்வதற்கு எமக்கு உதவியாக அமைவது,

i). பொது வாகனம் ii). மோட்டார் சைக்கிள் iii). நேரசூசி

31). பொது இடமல்லாதது,

i). வீடு ii). பாடசாலை iii). வைத்தியசாலை

32). “எனது உள்ளம் அடக்கமாக உள்ளது. எனது உள்ளத்தால் உணரப்படும் நிம்மதியை நண்பர்களுக்கும் இப்போது என்னால் பகிர முடியும்.” இவ் எண்ணம் மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாட்டில் எந்தப் படிமுறைக்கு உரியது.

i). மனவுறுதி ii). பிரார்த்தனை iii). மலர்வு (உதிப்பு)

33). சடங்கு என்றழைக்கப்படுவது,

i). எம்மால் கடைபிடிக்கமுடியாத விடயங்கள்.

ii). எம்மால் கடைபிடிக்க வேண்டிய விடயங்கள்.

iii). சித்திரை புத்தாண்டின் போது செய்ய வேண்டிய விடயங்கள்.

34). போதுமானளவு நீரை அருந்துவதால் ஏற்படக்கூடிய நன்மை,

i). சிறுநீரின் நிறம் கடும் மஞ்சளாக வெளியேறுதல்.

ii). சருமம் உலர்ந்து போதல்.

iii). வெளியேற்று செயற்பாடுகள் இலகுவாதல்.

35). இலங்கையின் தேசிய சின்னமாவது,

i). அலரி ii). நீலோற்பலம் iii). அரச மரம்

36). எமது பாரம்பரியத்தை உணர்த்தும் விடயங்களுள் ஒன்றாவது,

i). பண்டைய கட்டடங்கள், சிற்பங்கள், ஓவியங்கள், கற்செதுக்கல்கள்.

ii). திரிபிடகம், தொழில்நுட்ப சாதனங்கள், கோட்டைகள், கல்வெட்டுகள்

iii). சந்திர வட்டக்கல், கிராமியப் பாடல்கள், வாத்தியக் கருவிகள், தொல்பொருட்கள்

37). கதிர்காமக் கொடியேற்ற உற்சவம், ஆண்டுத்தோறும் கொண்டாடப்படுவது,

i). ஜனவரி மாதத்தில் ii). ஜுன் மாதத்தில் iii). ஜுலை மாதத்தில்

38). மருதாணி இட்டு அலங்காரம் செய்து கொள்பவர்கள்,

i). ஆதிவாசிகள் ii). தமிழ்ப் பெண்கள் iii). முஸ்லிம் பெண்கள்

39). தாவர வேர்களின் தொழிற்பாடு அல்லாதது,

i). தன் இனத்தைப் பெருக்குதல்.

ii). செடி, காய், பூ என்பவற்றை தாங்கிக் கொண்டிருத்தல்.

iii). தாவரத்தை மண்ணோடு தக்க வைத்தல்.

40). தாவரங்களில் தன் கூட்டை அமைத்துக் கொள்ளும் பறவை அல்லாதது,

i). காகம் ii). தேன்சிட்டு iii). குயில்

41). “நல்ல காற்றை நமக்காக நாளும் தருகின்ற - நல்ல மரங்கள்
இல்லையென்று ஆவதனால் எங்கும் பசுமை அழிகிறதாம்” இப்பாடல் மூலம் விளக்குவது,

i). காடுகளை அழித்தல்.

ii). குப்பைக் கூளங்கள் பெருகுதல்.

iii). தூய்மையான காற்று இல்லாமல் போதல்.

42). பல்லியிடம் காணப்படும் விசேட இயல்பு,

i). முட்டையிடுதல்.

ii). வால் அறுதல்.

iii). வேண்டிய இடத்திற்கு நகருதல்.

43). வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கை வட்டம் தொடர்பான படிமுறைகள் தரப்பட்டுள்ளன. அவற்றை ஒழுங்குமுறைப்படுத்தும் விடையை தெரிவு செய்க.

A – கூடு வெடித்தது.

B – சவ்வு கழன்றது.

C – முட்டையிலிருந்து புழு வெளி வந்தது.

D – வண்ணத்துப்பூச்சி வெளியே வந்தது.

E – புழு இலை உண்ணத் தொடங்கியது.

F – புழு, கூட்டை அமைத்தது.

i). CEFABD ii).CEBFAD iii).CEFBAD

44). பறவை இனம் அல்லாதது,
i). ஆந்தை ii). தீக்கோழி iii). வௌவால்

45). நாம் அன்றாடம் பயன்படுத்தும் பாவனைப் பொருள்கள் சிலவற்றைக் கட்ட (முடிச்சிட) நேர்வதுண்டு. அதன்படி முடிச்சிட வேண்டிய சந்தர்ப்பம் அல்லாதது,
i). பையினை முதுகில் அணிதல்.
ii). கழுத்துப்பட்டி (Tie) அணிதல்.
iii). உணவுப் பெட்டியைக் கட்டுதல்.

46). சுவரின் நிலைக்குத்தியல்பைப் பேண பயன்படுத்தப்படும் உபகரணம்,
i). தூக்குக் குண்டு ii). கயிறு iii). மூலைவிட்டம்

47). நோயிலிருந்து எம்மைப் பாதுகாக்கும் போசணைப் பதார்த்தம் அல்லாதது,
i). விற்றமின்கள் ii). புரதம் iii). கனியுப்புக்கள்

48). பிடியுடன் கூடிய கோப்பை எதற்குப் பொருத்தமானது,
i). பழச்சாறு வழங்குவதற்கு
ii). நீர் வழங்குவதற்கு
iii). சூடான பானம் வழங்குவதற்கு

49). "தேன்வதை எடுப்போம்." என்பது,
i). வினோத விளையாட்டு.
ii). பிராணிகள் போலச் செய்தல்.
iii). உபகரணங்களுடனான விளையாட்டு.

50). எமது உணவை சுவையூட்டுவதற்கு பயன்படுத்தும் மாசி, கருவாடு போன்றன,
i). தாவர உணவாகும். ii). விலங்குணவாகும் iii). உலர் உணவாகும்.

51). முதலுதவி எனப்படுவது,
i).நோயுற்றவரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபின் வழங்கப்படும் சிகிச்சையாகும்.
ii). வைத்திய சிகிச்சைக்கு முன்னர் தற்காலிகமாக வழங்கப்படும் சிகிச்சையாகும்.
iii). அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்து வழங்கப்படும் சிகிச்சையாகும்.

52). மின்னல் தாக்கத்திற்கு ஆளாகக்கூடிய சந்தர்ப்பமாவது,
i). இரவில் நித்திரை செய்யும் போது
ii). மைதானத்தில் விளையாடும் போது
iii). வாகனத்தில் பயணிக்கும் போது

53). நீரின் பிரதான இயல்பு அல்லாதது,

i). நிறமற்றது.

ii). மணமற்றது.

iii). வடிவமும், சுவையும் உடையது.

54). பாதசாரி ஒருவர் வீதியை கடக்கும் போது அவதானிக்க வேண்டியன,

i). வாகன சமிக்ஞை விளக்கில் மஞ்சள் நிறம் ஒளிரும் போது கடத்தல்.

ii). பாதசாரிகள் சமிக்ஞை விளக்கில் சிவப்பு நிறம் ஒளிரும் போது கடத்தல்.

iii). பாதசாரிகள் சமிக்ஞை விளக்கில் பச்சை நிற மனிதன் தென்படும் போது கடத்தல்.

55). முன்மாதிரியான வீட்டுத்தோட்டமொன்றில் பயிரிடக் கூடியது.

i). பழ மரக்கன்றுகள் ii). பூக்கன்றுகள் iii). காய்கறிகள்

56). மூன்றாந் தரத்தில் நாம் உருவாக்கிய காற்றாடியை ஆக்குவதற்கு அவசியமற்ற பொருளாவது,

i). குண்டூசி ii). ஆணி iii). உயரமான கண்ணாடிப் போத்தல்

57). மின் காந்தத்தை உருவாக்குவதற்கு அவசியமானது,

i). LED மின்குமிழ் ii). செப்புக் கம்பி iii).மின்சூழ்

58). இலங்கையின் பெரிதும் பழைமை வாய்ந்த வரலாற்று முக்கியத்துவமான ஒன்றாவது,

i). ஹம்பாந்தோட்டை துறைமுகம்

ii). கபலித்தாவை புளியமரம்

iii). விக்டோரியா அணைக்கட்டு

59). தொலைவிலிருக்கும் நண்பர் ஒருவருக்கு விரைவாக படமொன்றை அனுப்புவதற்கு பொருத்தமான வழி,

i). புலனம் (Whats app) ii). தந்தி(Telegram) iii). குறுஞ்செய்தி (sms)

60). “ நாம் வாழும் சூழலைப் பேணிப் பாதுகாப்போம்.” என்பதைத் தலைப்பாகக் கொண்டு மூன்று வாக்கியங்கள் எழுதுக. ( ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்புகளும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

i). ..........................................................................................................................

..........................................................................................................................

ii). ..........................................................................................................................

..........................................................................................................................

iii). ..........................................................................................................................

..........................................................................................................................